2009 ஜூலை 1]

(ஆ) உறுப்பினர்களுக்குப் பேசும் வாய்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

***திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலையிலே ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கேள்விக்குப் பதில் அளித்தார்கள். அது தமிழ்நாட்டினுடைய பாதுகாப்புப் பிரச்சினை; எதிர்காலத்தினுடைய பிரச்சினை என்ற காரணத்தாலே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். முக்கியமான பிரச்சினை, நாங்களும் அதிலே வினா எழுப்ப வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மூவர் கையை உயர்த்திக்கொண்டிருந்தோம். உங்களிடத்திலே அனுமதி கேட்டோம். ஆனால், அ.தி.மு.க. சார்பில் 3 பேருக்கு வாய்ப்புக் கொடுத்தீர்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பிலே 2 பேருக்கு வாய்ப்புக் கொடுத்தீர்கள். ஆனால், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் ஒருவருக்குக்கூட வாய்ப்புக் கொடுக்கவில்லை. இது வேதனை அளிக்கிறது. அதுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் சொன்னதைப்போல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணி, இப்போது பேசுகிறீர்களே!

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, பல முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் எல்லாம், கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கிறோம். 'ஆய்வில் இருக்கிறது. எடுத்துக்கொள்கிறேன், எடுத்துக்கொள்கிறேன்' என்று சொல்கிறீர்கள். முக்கியமான பிரச்சினைகள். நாங்கள் அரசியல் நோக்கத்திற்காகப் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் கொடுத்திருப்பதை எடுக்கக்கூடாது என்கிற எண்ணம் இல்லை. (குறுக்கீடு) துணைக் கேள்விக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்ற எண்ணமோ, எதுவுமே கிடையாது. Work load, pressure-ல் தான், இங்கே எல்லாக் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்து, அப்படியே முடிக்கிறோம், அவ்வளவுதான். யார், எந்தக் கட்சி என்று பார்ப்பதில்லை.

திரு. ஜி.கே. மணி: அ.தி.மு.க.-விற்கு 3 பேருக்கு, காங்கிரஸ் கட்சிக்கு 2 பேருக்கு, ஆனால், பா.ம.க.-விற்கு வாய்ப்பில்லை, என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் மற்ற கட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதைக் கேளுங்கள். தனிப்பட்ட முறையில் aspersions against Speaker என்று வரக்கூடாது, தெரிகிறதா? முதலில் தனிப்பட்ட முறையில் உங்களுக்குக் கொடுக்கக்கூடாது என்றோ, பா.ம.கட்சிக்குக் கொடுக்கக்கூடாது என்றோ, அந்த எண்ணம் எதுவும் கிடையாது. ஏறக்குறைய எல்லோரும் கையைத் தூக்குகிறார்கள். அவ்வளவு பேருக்கும் கொடுத்தால் கேள்வி நேரமே இன்றைக்கு மதியம் 1½ மணி வரையில் நடக்கும். அதனால் அது முடியாது. கொடுக்கக்கூடிய கேள்வியை யார், யாருக்குக் கொடுக்க வேண்டுமோ, அதில் வாய்ப்பு இருப்பவர்களுக்குக் கொடுப்போம். அடுத்த கேள்விக்கு என்று நீங்கள் கையைத் தூக்கினால் உங்களுக்குக் கொடுப்போம். இன்னும் இரண்டு முக்கியப் பிரச்சினைகள் இருக்கின்றன. அது விஷயமாகப் பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வேல்முருகன், உங்களுக்குக் கொடுக்கக்கூடாது என்கிற எண்ணமோ, வேண்டுமென்றே avoid பண்ணுவதோ இல்லை. அதை முதலில் நினைத்துக்கொள்ளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. மகேந்திரன்

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்கிறேன், கேளுங்கள். எங்களுக்கு வாய்ப்புத் தரவில்லை, வெளிநடப்புச் செய்கிறேன் என்று அவர் சொன்னார். போய் உட்காருங்கள் என்றுதான் நான் சொன்னேன். அடுத்த கேள்விக்குக் கொடுப்போம். இதில் என்ன இருக்கிறது? (குறுக்கீடு) நீங்கள் சொன்னீர்களா, இல்லையா என்னிடம் வந்து? (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். திரு. மகேந்திரன்.

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய பொதுத் துறை நிறுவனமான. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போய் உட்காருங்கள் என்றுதான் நான் சொன்னேன்.

TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 1]

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): நீங்கள் senior Member. இதெல்லாம், Speaker's Chamber-ல் பேசி முடிவு செய்ய வேண்டியதை சபையிலே எழுப்பி Speaker-னுடைய செயல்பாடுகளுக்கு உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது. இது ஒரு bad precedent-ஆகப் போய் விடும் என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, உட்காருங்கள். திரு. மகேந்திரன்.

(பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்)

(இ) N.L.C. நிறுவனப் பங்குகள் விற்பனை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மத்திய அரசினுடைய பொதுத் துறை நிறுவனமான N.L.C நிறுவனத்தினுடைய 10 சதவிகிதப் பங்குகளைத் தனியாருக்கு விற்பது என்று மத்திய அமைச்சரவை எடுத்திருக்கக்கூடிய முடிவு சம்பந்தமாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் எங்களால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது N.L.C சம்பந்தப்பட்ட அந்த issue-வை எடுக்கிறோம். அதில் பேசும்போது இதுபற்றிப் பேசுங்கள்.

(ஆ) உறுப்பினர்களுக்குப் பேசும் வாய்ப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் அவையிலே சில மரபுகளை நீங்கள் கடைப்பிடிக்கிறீர்கள். அதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. எதிர்க்கட்சிகள் என்ற முறையில் சில கேள்விகள் எழுப்புகிறபோது, கவன ஈர்ப்பு அறிவிப்பு, ஒத்திவைப்புத் தீர்மானம் போன்றவை கொடுக்கிறபோது அந்தப் பிரச்சினைகள் குறித்து அவர்களுடைய கருத்து என்னவென்று கேட்டு, அவற்றை எடுப்பதோ, மறுப்பதோ உங்களுடைய உரிமை என்பதை நான் நேற்றையதினமே சொன்னேன்;

அதை நாங்களும் ஒப்புக்கொள்கிறோம். அதற்குரிய சந்தர்ப்பத்தை அளித்ததிலே பல பிரச்சினைகள் வந்ததாகத்தான், நேற்றையதினம் வந்தது. இன்றையதினம் அந்தக் கேள்வி நேரத்தைப் பற்றியும் வருகிறது. ஏதோ கொஞ்சம் மாறுபாடு இருப்பதாக நான் உணர்கிறேன். எதிர்க்கட்சிகள் சம்பந்தப்பட்ட விஷயங்களிலே, மாறுபாடுகளும், அவர்களைப் பேச அனுமதிப்பதிலே ஏதாவது பிரச்சினைகள் இருக்கின்றனவா? இதுகுறித்து தலைவர் அவர்களை நான் கேட்பது என்பதே நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்பதாகத்தான் நான் நினைத்துக்கொண்டு கேட்கிறேன். அந்த விஷயத்திலே அவர்கள் எப்போதும்போல இல்லை. நேற்றையதினம் நடந்தபோதும்கூட எனக்கு அதிர்ச்சிதான். அண்ணா தி.மு.க.-வை வெளியேற்றியதிலே எனக்குப் பிரச்சினை இல்லை. நாங்களே வெளியேறி இருக்கிறோம். உங்களோடு சேர்ந்து இருந்தபோதும் வெளியேறி இருக்கிறோம். ஆனால், இந்த விஷயங்களிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தைப் பற்றி என்ன கருதுகிறார்கள்? ஏதாவது எங்கள்மீது வருத்தம் இருக்கிறதா? அப்படி என்ன வருத்தம் இருக்கிறது? முறைகேடாக நடந்தால் அதைத் திருத்தலாமே? திருத்துவதை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்குரியவர்களாகத்தானே இந்த அவையிலே உறுப்பினர்களாக இருக்கிறோம்? ஆகவே, இந்த விஷயங்கள் வருகிறபோது அப்படி மாறுபாடுகள் வருவதாக இரண்டு, மூன்று தினங்களாக நான் கருதுகிறேன். அப்படி எதிர்க்கட்சிகள் என்ற முறையிலே அவர்களுடைய உரிமை, அவர்களுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்குரிய அவை என்ற முறையிலே அந்தக் காரியங்களைச் செய்யலாமே? வெளியேற்றுகிறபோது, வெளியேறுகிறவர்களை உள்ளே அழைத்துத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வழக்கம். ஆனால், நேற்றையதினம் அவர்கள் அப்படிச் சொல்லிவிட்டார்கள் என்பதில் எனக்கு வருத்தமாக இருக்கிறது. ஆகவே, வருத்தங்கள் இருந்தால் தெரிவிக்க வேண்டும். அதன்மீது நம்முடைய சபையை எதிர்க்கட்சிகளுக்கு உரிய பங்கை அனுமதிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-45

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி நண்பர்கள் உரையாற்றுவதிலோ அல்லது கருத்துகளைச் சொல்வதிலோ—அரசினுடைய திட்டங்களுக்கு, சாதனைகளுக்கு முரணான கேள்விகளையோ அல்லது

2009 ஜூலை 1] [கலைஞர் மு. கருணாநிதி]

அமைச்சர்களைப் பற்றி இலாகாபூர்வமான விமர்சனங்களைச் செய்வதையோ—அதிலே அமைச்சர்களாயினும், முதலமைச்சர் உட்பட, யாராயினும் தவறு செய்திருப்பின் அதைச் சுட்டிக்காட்டுவதையோ, இன்னும் சொல்லப் போனால், அவைகளெல்லாம் என்னைத் திருத்திக்கொள்வதற்குப் பயன்படக்கூடியவை என்று எண்ணுகிற நிலையிலே உள்ளவர்களைக் கொண்ட ஆட்சியே தவிர, யாரையும் விரட்ட வேண்டும்; ஜனநாயகத்தைக் கிறங்கடிக்க வேண்டும் என்ற நிலையிலே நடைபெறுகின்ற ஆட்சி இந்த ஆட்சி அல்ல என்பதை இன்றல்ல, பல முறை நான் விளக்கியிருக்கின்றேன்.

ஆனால், ஒருவருக்கொருவர் நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவிலுள்ள உறுப்பினர்கள் அல்லது இப்போது இதுபற்றிப் பிரச்சினை எழுப்பிய இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள், இவர்களெல்லாம் ஒரு குறுகிய அளவில் அமர்ந்து பேசி, ஏன் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகின்றன? நாம் நண்பர்களாக இங்கே உள்ளே நுழைகிறோம். ஒவ்வொரு நாளும் ஏதோ பரம்பரை விரோதிகளைப்போல நம்முடைய பேச்சுக்களை அமைக்கிறோம். இது தேவைதானா என்பதை அலுவல் ஆய்வுக் குழுவினைப் போன்ற ஒரு குழுவிலே நாம் பேசி முடிவெடுப்பது நன்றாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

ஏனென்றால், நேற்றையதினம் என்ன நடந்தது என்பது அவர்களுக்குத் தெரியும். எதிர்க்கட்சி, பிரச்சினைகளுக்கு வக்காலத்து வாங்கி—வக்காலத்து என்பதைக்கூட நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். ஏனென்றால், இப்போது சிவபுண்ணியம் வக்காலத்து வாங்குகிறார் என்று நான் சொல்லமாட்டேன். எதிர்க்கட்சிக்குத் துணை நிற்க வேண்டும் என்று ஒரு முடிவெடுத்த பிறகு—அது தவறானது அல்ல. அதை நான் குறை சொல்லமாட்டேன். ஆனால், அதற்காக ஆளுங்கட்சியினுடைய ஒவ்வொரு அசைவுக்கும் அர்த்தம் கற்பித்து, எதைச் சொன்னாலும் அதை ஆளுங்கட்சி சொன்னால் அதை எதிர்ப்பது என்ற முறையிலே நடந்துகொள்வது எதிர்க்கட்சிக்கும் அழகல்ல; அவர்களுக்குத் துணையாக இருக்கின்ற கட்சிகளுக்கும் அழகல்ல.

முற்பகல் 10-50

நேற்றையதினம் நடந்ததை நான் மறுபடியும் இங்கே எடுத்துச் சொல்லி, இடையிலேயே எங்களை இடைமறித்து அதற்குப் பதிலைச் சொல்லி, மீண்டும் ஒரு குழப்பச் சூழ்நிலையை அவையிலும்,

[கலைஞர் மு. கருணாநிதி] [2009 ஜூலை 1

நம்முடைய மனதிலும் ஏற்படுத்திக்கொள்ள நான் விரும்பவில்லை. எதைச் சொல்வதாக இருந்தாலும், அது ஆளுங்கட்சியானாலும், எதிர்க்கட்சியானாலும், ஒருவரே எழுந்து நின்று அவைத் தலைவரிடத்திலே தங்கள் கையை அசைத்து, நாங்கள் பேசவேண்டுமென்று கூறி, ஜாடை செய்தால்கூடப் போதும்; கூற வேண்டிய அவசியம் இல்லை, ஜாடை செய்து அவைத் தலைவர் அதைப் பார்க்காவிட்டாலும்கூட அவருடைய செயலாளர்மூலம் அறிந்து, அவர்களைப் பேசச் செய்யலாம்.

ஒருவர் பேசினால், மொத்த எதிர்க்கட்சிகளின் கருத்தை அல்லது தோழமைக் கட்சிகளின் கருத்தை அவர்களைச் சார்ந்த ஒருவர் பேசினால், அவைத் தலைவரும் புரிந்துகொள்ள முடியும்; ஆளுங்கட்சியிலேயிருக்கிற நாங்களும், குறிப்பாக அவை முன்னவர் பேராசிரியர் அவர்களும், முதல்வர் பொறுப்பிலே இருக்கிற நானும் அவைகளுக்குப் பதில் சொல்ல முடியும். ஒரு பத்து பேராகச் சேர்ந்துகொண்டு—ஒரே நேரத்தில் பத்து பேரும் பேசும்போது, எந்தப் பேச்சுக்குப் பதில் சொல்வது என்பது புரியாமல் இருக்கும்.

இது எப்படி ஆகிவிட்டது என்றால், கம்பு விளையாடுகின்றவர்கள், ஒருவர் கம்பு சுற்றுவார், அவருக்கு எதிர்ப்பாக இன்னொருவர் கம்பு சுற்றுவார். இரண்டு பேர் கம்பு சுற்றும்போது மிகத் திறமையானவராக இவர் இருக்கிறாரா என்று சோதிப்பதற்காக ஒரு *10* பேர் சுற்றி நின்றுகொண்டு, *10* கம்புகளைச் சுற்றுவார்கள். நடுவிலே இருக்கிறவர் அனைத்துக் கம்புகளையும் சந்திப்பதற்கு முடியாமல் குழப்பம் ஏற்படும். அதனால், ஒருவர் கம்பு சுற்றுவதாக இருந்தால் அது ரசிக்கத்தக்கதாக அமையும்; காணத்தக்கதாகக்கூட இருக்கும்.

ஆனால், இங்கே யார் என்ன சொன்னார்கள் என்று தெரியாமல், ஒரு உறுப்பினர் கடற்படை பற்றிக் கேள்வி கேட்க, இன்னொரு உறுப்பினர் கப்பற்படையைப் பற்றிக் கேள்வி கேட்க, இன்னொரு உறுப்பினர் இவை இரண்டுக்கும் சம்பந்தம் இல்லாமல் இன்னொரு விஷயத்தைப் பற்றிப் பேச—நான் எதற்குப் பதில் சொல்வது என்று புரியாமல் ஒரு திகைப்பு எனக்கு ஏற்படும். இது எல்லா அமைச்சர்களுக்கும் ஏற்படும். எங்களுக்கு மட்டும் ஏற்படுவது இல்லை, சபாநாயகருக்கும் ஏற்படும். அதனால்தான், எந்தக் கருத்தைச் சொல்வதாக இருந்தாலும் முதலிலேயே யார் என்று கூறுங்கள். எப்படி இப்போது கூடிப் பேசி வெளியேறுவது அல்லது ஒலி எழுப்புவது, கோஷமிடுவது என்ற திட்டங்களை நிறைவேற்றுகிறீர்களோ, அதைப்போல, கூடிப் பேசி, நம் சார்பாக ஒருவர் இந்தச் செய்தியைச்

2009 ஜூலை 1] [கலைஞர் மு. கருணாநிதி]

சொல்வது—இந்த வினாவை எழுப்புவது, அதற்கு விளக்கம் கேட்பது என்று இருந்தால் நீங்கள் கேட்பது என்னவென்று எங்களுக்கும் புரியும். நாங்கள் சொல்கிற பதிலும் உங்களுக்குப் புரியும். பத்திரிகைக்காரர்களுக்கும் என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்ளக்கூடிய நிலைமை ஏற்படும்.

இரண்டும் இல்லாமல், ஆளுங்கட்சிக்காரர்களும், எதிர்க் கட்சிக்காரர்களும் சண்டை போட்டுக்கொண்டார்கள். என்ன நடந்தது என்றால், இதுதான் நடந்தது என்று சொல்ல நேரிடும். நாம் சட்டமன்றத்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். "சட்டமன்றம் இன்றையதினம் அமளி மன்றம்" என்ற நிலைக்குப் போய்விடக்கூடாது என்பதிலே ஒவ்வொரு உறுப்பினருக்கும் கவலை உண்டு. அந்த உறுப்பினரின் கவலையை நான் மதிக்கின்றேன். அப்படி மதிக்கின்ற காரணத்தால், சில நேரங்களில் சில அசம்பாவிதங்களால் ஏற்படுகின்ற விளைவுகளைப் பொறுத்துக்கொள்ள நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

நண்பர் திரு. ஜி.கே. மணி அவர்கள் இன்று காலையில் அந்தக் கேள்வி வந்தபோது, முதலமைச்சருக்கான வினாக்களுக்கான விடைகளை நான் அளிக்கின்ற நேரத்தில் கையை உயர்த்தினார்கள். பல முறை மாண்புமிகு சபாநாயகருடைய கவனத்தை ஈர்க்க முயன்றார்கள். ஆனால், அவர் என் கவனத்தை ஈர்த்த அளவிற்கு மாண்புமிகு சபாநாயகரின் கவனத்தை ஈர்க்காமல் போய்விட்டார். உங்களுக்குத் தெரியும், முதல் வரிசையில் இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரியும், நான் இங்கு இருந்துகொண்டே, மாண்புமிகு சபாநாயகரின் செயலாளர் அவருக்காகப் பணிபுரிவதைவிட, இங்கிருந்து நான் அங்கே யார் கை தூக்குகிறார்கள் என்று அவர்களின் அடையாளத்தை எல்லாம் காட்டித் தெரிவிக்கும் அடையாளமாகத்தான் சபாநாயகருக்குப் பயன்பட்டுக்கொண்டிருக்கின்றேன். அதையும் மீறி இன்றைக்கு மாண்புமிகு சபாநாயகர் அவர்கள், திரு. ஜி.கே. மணி அவர்களை அழைக்காமலே வேறு பிரச்சினைக்குப் போய்விட்டார். எனவே, திரு. ஜி.கே. மணிக்கு அந்தக் கோபம் ஏற்பட்டது. நியாயமான கோபம்தான் என்பதை நான் அறிகிறேன்.

இருந்தாலும், நான் எதிர்பார்த்தேன், இதற்கு ஒரு வெளிநடப்பு இருக்குமோ என்று; நல்ல வேளையாக இதற்கு ஒரு வெளிநடப்பு இல்லாமல் போய்விட்டது. எதிர்க் கட்சியிலே உள்ள தலைவர் அவர்களுக்கும், துணைத் தலைவருக்கும், கொறடா உட்பட எல்லா நண்பர்களுக்கும் நான் வேண்டிக் கேட்டுக்கொள்வது என்னவென்றால்,

[கலைஞர் மு. கருணாநிதி] [2009 ஜூலை 1

எந்தப் பிரச்சினையானாலும், எங்களைத் தாக்கிப் பேச வேண்டுமா? பேசுங்கள். அப்படிப் பேசும்பொழுது என்ன பேசுகிறீர்கள் என்று எங்களுக்குத் தெரிந்தால்தான் நாங்கள் பதில் சொல்லமுடியும்.

முற்பகல் 10-55

எல்லோருமாகச் சேர்ந்துகொண்டு—நான் சொல்வதற்காக வருத்தப்படக் கூடாது—"குய்யோ, முறையோ" என்பதுபோல எல்லோரும் ஒரு கோஷ்டி கானம் வாசித்தால், யார் என்ன சொன்னார்கள் என்று புரியாமலேயே குழப்பத்திலேதான் முடியும். அது ஆளுங்கட்சியினர் சொல்லியிருந்தாலும் சரி; எதிர்க்கட்சியினர் சொல்லியிருந்தாலும் சரி, நான் இதை எதிர்க்கட்சிக்கு மாத்திரம் சொல்லவில்லை; ஆளுங்கட்சிக்கும் சேர்த்துத்தான் சொல்லுகின்றேன். அவர்கள் ஒரு குரலை எழுப்பினால், அதற்கு இங்கிருந்து எதிர்க் குரல் கூடாது என்று பல முறை நான் எச்சரித்து, ஆளுங்கட்சி நண்பர்களுக்குக் கூறியிருக்கின்றேன். அவர்களுக்கு எச்சரித்துக் கூறியிருக்கிறேன்.

எதிர்க்கட்சி நண்பர்களுக்கு நான் மிக, மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன். நம் சட்டசபை எப்படி நடக்கிறது என்பதை வெளியிலே இருக்கின்ற பொது மக்கள் பத்திரிகையைப் பார்த்துப் படிக்கும்போது—'அன்று வெளிநடப்பு, இன்று வெளிநடப்பு'—என்று தினந்தோறும் இந்தச் செய்தி வந்தால், "என்ன சட்டசபை இது" என்று அலுத்துக்கொள்கிற நிலைமை பொது மக்களுக்கு ஏற்படும். நாம் அடுத்த முறை தேர்தலுக்குச் சென்று ஓட்டுக் கேட்டாலுங்கூட, "அங்கே போய் என்ன செய்யப் போகிறீர்கள்? ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ளப் போகிறீர்கள். இதைத்தான் செய்யப் போகிறீர்கள்" என்று சொல்வார்கள்.

ஆகவே, நாம் அடுத்த தேர்தலை மனதிலே கொண்டு, இந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளில் அமைதி காத்து, கண்ணியம் காத்து, கடமையாற்ற வேண்டும் என்று நான் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன். இந்த வேண்டுகோளில்கூட உங்களுக்குத் தவறு தெரியுமேயானால், அதையும் எனக்குச் சுட்டிக்காட்டலாம். எல்லோரும் எழுந்து எதிர்ப்புக் காட்ட வேண்டிய அவசியமில்லை. தேவையும் இல்லை என்பதைத் தெரிவித்து, அவையின் பணி ஒழுங்கோடு நடைபெற, அழகுற நடைபெற, அமைதியாக நடைபெற நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று மீண்டும், மீண்டும் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)